முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு நன்றி

# 'மெட்ரோ ரெயில் கட்டணம் குறைந்ததால் மகிழ்ச்சி'

## பயணிகள் வரவேற்பு

திருவொற்றியூர், பிப். 22-

சென்னையில் 2 வழித்தடங்களில் 54 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது. கொரோனா ஊரடங்கு தளர்வுக்கு பின்னர் கடந்த செப்டம்பர் 7-ந் தேதி முதல் மீண்டும் மெட்ரோ ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது தினமும் சராசரியாக 80 ஆயிரம் பேர் வரையிலான பயணிகள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து வருகிறார்கள்.

பயணிகளிடம் அதிகபட்சமாக ரூ. 70 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த கட்டணத்தை குறைக்க அனைத்து தரப்பினரும் அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை பரிசீலித்த முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி மெட்ரோ ரெயில் கட்டணத்தை குறைத்து உத்தரவிட்டார்.

அதன்படி அதிகபட்ச கட்டணம் ரூ. 50 ஆக குறைக்கப்பட்டு உள்ளது. மேலும் ரெயில் நிலையங்களுக்கு இடையிலான கட்டணம் ரூ. 10 முதல் ரூ. 20 வரை குறைந்து இருக்கிறது. இந்த புதிய கட்டணம் இன்று (திங்கட்கிழமை) முதல் அமலுக்கு வந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையிலான கட்டணம் ரூ. 40-ல் இருந்து ரூ. 30 ஆக குறைந்து உள்ளது. இதேபோல் விம்கோநகர் - விமான நிலையம் ரூ. 50 ஆகவும் (பழைய கட்டணம் ரூ. 70), சென்ட்ரல்-கோயம்பேடு ரூ.30 (ரூ.40), எழும்பூர்-கோயம்பேடு ரூ.30 (ரூ.60) ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

மெட்ரோ ரெயில் கட்டணம் குறைப்புக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இது தொடர்பாக இன்று காலை விம்கோநகர் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு வந்த பயணிகள் கூறியதாவது:-



**தில்லை (தனியார் வங்கி ஊழியர்):-** நான் விம்கோநகரில் இருந்து தினமும் அரும்பாக்கம் வரை இரண்டு பஸ் மற்றும் ஆட்டோவில் சென்று வருவேன். சுமார் 2 மணி நேரம் ஆகும் ஆனால் மெட்ரோ ரெயிலில் 45 நிமிடத்தில் செல்ல முடிகிறது. குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடிவதால் மகிழ்ச்சி. கட்டணம் குறைப்பு கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்



**விமலா (தனியார் நிறுவன ஊழியர்):-** தினமும் விம்கோநகரில் இருந்து கிண்டி சென்று வருகிறேன். கிண்டி செல்ல பஸ் வசதி குறைவு. அப்படியே சென்றால் போக்குவரத்து நெரிசல், பஸ்சில் கூட்ட நெரிசல், அலுவலக நேரங்களில் நின்று கொண்டு தான் வர வேண்டும்,

ஆனால் இப்போது நிம்மதியாக சென்று வர முடிகிறது, மெட்ரோ ரெயில் வந்ததால் வட சென்னை வாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கட்டணத்தை குறைத்த முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு நன்றிகள். டிக்கெட் விலை குறைப்பு பயணிகளுக்கு வரப்பிரசாதம்.



**ஜெனிபர் (தனியார் நிறுவன அதிகாரி):-** நான் தேனாம்பேட்டை வரை தினமும் வேலை நிமித்தமாக சென்று வருகிறேன். இரண்டு பஸ்சில் மாறி செல்ல வேண்டும். இப்போது எளிதில் செல்ல முடிகிறது, அவசரமாக செல்ல வேண்டும் என்றால் என் கணவரின் வண்டியில் சென்று வந்தேன், இப்போது மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வதால் எளிதாக உள்ளது, கட்டணம் குறைப்பு மகிழ்ச்சி தருகிறது.



**டாக்டர் அலி:-** கோயம்பேட்டில் இருந்து வருகிறேன், கட்டணம் சரியாக உள்ளது, பயணநேரமும் குறைவாக உள்ளது, முன்பு கார் ஆட்டோவில் வரவேண்டும், அதில் பயண களைப்பு ஏற்படும். மெட்ரோ ரயிலில் வந்ததால் பயணக் களைப்பும் இல்லை.

இவ்வாறு அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.